www.tamilarangam.net

தனிச் சுற்றுக்கு மட்டும்

★EPIC

# ஈழச் செய்தி

## EELAM NEWS

கடிதம் **29** ஜூன் **1985**

## மக்கள் விடுதலைப்படை போரிடுகிறது.... பகைவனின் தளங்கள் தகர்க்கப்படுகின்றன



தளபதி சிவா

★ கௌரவப் பிரஜைகளாய் களத்தில் மடிந்த வீரர்கள்.

★ கிளிநொச்சி பொலிஸ். இராணுவ கூட்டுமுகாம் மீது தாக்குதல்

★ காரைநகர் சிறீலங்கா கடற்படைத்தளம் சின்னாபின்னமானது.

★ ஈழமே ஒரே தீர்வு
நான்கு விடுதலை இயக்கங்களின் ஒருமித்த முடிவு
(விபரங்கள் உள்ளே)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆசிரியர் குறிப்புகள்

***பாசிச வீழ்ச்சியை நினைவு கூருவோம்***

# இந்துமாக்கடல் பிராந்திய பதட்டத் தணிவுக்கு ஈழம் துணை புரியும்

உலகப் பாசிசம் மனிதகுலம்மீது உயர்த்திய கொலை வாளினை உடைத்து தகர்த்த 40 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. வரலாற்று சக்கரங்களை பாசிஸ்டுக்களால் பின்னோக்கி திருப்பமுடியவில்லை. ஐந்து கோடிக்கு மேற்பட்ட உலக மக்கள் தமது இன்னுயிரை ஈர்ந்து பாசிசக் காட்டேரிகளிடம் இருந்து மனித குலத்தை காத்தனர். இந்த வீரமிக்க வரலாற்று படைப்பாக்கத்தில் சோவியத் யூனியனின் புதல்வர்களும், புதல்வியரும் இரண்டு கோடிப் பேருக்குமேல் ஈடு இணையற்ற தியாகம் புரிந்தனர். பாசிசத்தின் வெற்றியும் தோல்வியும் சோவியத், ஜெர்மன் யுத்த களங்களில்தான் தீர்மானிக்கப் பட்டது என்பதை மனிதகுல வரலாறு என்றென்றும் நினைவு கூருகிறது.

மனித குலத்தின் பொது எதிரிகள் சுமத்திய கனத்த சுமைகளையெல்லாம் சோவியத் மக்கள் சுமக்க வேண்டியேற்பட்டது. சோசலிச தாயகத்தை காக்கும் மன வலிமையும், உலகமக்களை பாசிச அரக்கனிடமிருந்து பாதுகாக்கும் சர்வதேசிய உணர்வும் சோவியத் மக்களை வீராவேசப்படுத்தியது. வின்ஸ்டன் சர்ச்சில் கூறியது போல ''சோவியத் இராணுவமே ஜெர்மன் யுத்த இயந்திரத்தின் குடலைக் கிழித்து உருவி எடுத்தது.''

வீரம் செறிந்த போராட்டத்தில் தமது இன்னுயிர்களை இழந்த சோவியத் பூமியின் புதல்வர்களுக்கும், புதல்விகளுக்கும், வீழ்ந்துபட்ட ஏனைய நாட்டு வீரர்களுக்கும் தமது வீர வணக்கத்தை செலுத்துகிறோம். வீழ்ந்துபட்ட வீரர்களை மனித குலம் என்றென்றும் நினைவு கூரும்.

உலகப் பாசிசத்தின் வீழ்ச்சியை நினைவு கூரும் இவ்வேளையில் உலக சமாதானத்துக்கு ஏற்பட்டு வரும் அச்சுறுத்தலையும், கெடுபிடிப் போர் ஒன்றை மனிதகுலம்மீது கட்டவிழ்த்து விட படுகொலை ஆயுதங்களை குவித்து வருகின்ற ஏகாதிபத்தியத்தின் படுகொலை கொள்கைகளையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சோசலித்தின்மீதும். ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசங்கள் மீதும், தேச விடுதலைப் போராட்டங்கள் மீதும் அமெரிக்க ஏகாதிபத்திய ஆளும்வட்டாரங்கள் கொண்டுள்ள தீராத பகைமை அப்பட்டமானது. மீண்டும் ஓர் உலக யுத்தத்தை மனிதகுலம் சகிக்க முடியாது என்பதால் யுத்த வெறியர்களுக்கு எதிராக, ஏகாதிபத்திய மனிதகுல விரோதிகளுக்கு சாவுமணியடிக்க அனைத்து வலிமைகளையும் மனிதகுலம் ஒன்று திரட்ட வேண்டும். சோசலிச முகாமை குழிபறிப்பது, தேசங்களிடையே ஆயுத மோதல்களை மூட்டி விடுவது, கூட்டுச்சேரா இயக்கம்மீது அச்சுறுத்தலை ஏவிவிடுவது ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளை சுற்றி யுத்த விளைநிலங்களை உருவாக்குவது என்கின்ற அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், அதன் இராணுவ கூட்டாளிகளதும் சதிமுயற்சிகளை முறியடிக்க வேண்டிய கடமைப்பாட்டை ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும், சமாதானத்தையும், சமூக முன்னேற்றத்தையும் நேசிக்கும் ஒவ்வொருவரும் நிறைவேற்ற வேண்டும், இத்தகைய வரலாற்று பணியை தமது தேச விடுதலைக்காக போராடுகின்ற ஈழமக்களும் நன்குணர்ந்துள்ளனர்.

ஈழமக்களின் விடுதலைப் போராட்டம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் யுத்த விளைநிலமாக இலங்கைத் தீவு மாறி வருவதை தடுத்து நிறுத்துகின்ற, ஏகாதிபத்திய எதிர்ப்பு கூர்முனையாகி விட்டது. ஏகாதிபத்திய பயங்கரவாதிகளும், அவர்களின் மேலாதிக்க கூட்டாளிகளும் சிறீலங்கா சிங்கள இனவெறி அரசுக்கு முட்டுக் கொடுத்து வருகின்றனர். இந்திய துணைக் கண்டத்தின் மீது குறி வைத்துள்ள உலகப் பயங்கரவாத சக்திகளுக்கு இலங்கைத்தீவு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளமாக இருக்கிறது. சர்வதேச பயங்கரவாத நாடுகள் அமெரிக்காவின் ஆணையின் பெயரில் சிறீலங்காவுக்கு உதவ ஓடோடி வருவதுபோல் இலங்கைத்தீவின் உள்ளே நுழைந்துள்ளனர். இந்நிலையில் வீறுகொண்டெழுந்துள்ள ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவது என்பது இந்திய துணைக்கண்டத்தின் பாதுகாப்புக்கும் வழி வகுப்பதாகவே அமையும். இந்துமாக்கடல் பிராந்தியத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு தளமாக உருவாகும் ஈழம் எழுந்து நிற்கும்.

உலக சமாதானத்துக்காக போராடுவதும் தேச விடுதலைக்காக போராடுவதும் ஒன்றுக்கு ஒன்று எதிரானவையல்ல. தேசிய ஒடுக்கு முறைகளும் ஆயுதமேந்தியமோதலுக்கான களங்களை உருவாக்குகின்றன. ஒடுக்கு முறையாளரின் ஆயுத முனைகளின் கீழ் ஒடுக்கப்படும் மக்கள் மிதிபடும்போது ஆயுத மோதலுக்கான களங்கள் உருவாக்கப்படுகின்றன. எனவே தேசிய ஒடுக்குமுறைகளுக்கு முடிவு கட்டுவது என்பது சமாதானத்துக்கு துணைபுரிவதாகவே இருக்க முடியும.

www.tamilarangam.net



# ஈழ மண்ணில் எதிரிப்படை முகாம் மீதான பாரிய தாக்குதல்

# பகைவருடன் மோதி வீரமரணமடைந்த முதல் பெண் போராளி

★ *152 பகைவர் மாய்க்கப் பட்டனர்*

★ *2 கோடி ரூபா மதிப்புள்ள இயந்திரம் தகர்ப்பு*

3-5-85 அன்று இரவு 9-35 மணியளவில் காரை நகரிலுள்ள சிறீலங்கா கடற்படை தளம்மீது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் படையான மக்கள் விடுதலைப் படையினர் தாக்குதல் தொடுத்தனர். ஈழ மண்ணில் உள்ள மிகப் பெரிய கடற்படை தளங்களில் ஒன்றான காரைநகர் கடற்படை தளம் 16 ஏக்சர் நிலப்பரப்பில் 37 க்கு மேற்பட்ட பாரிய கட்டிடங்களை கொண்டதாகும். இங்குள்ள 350-க்கு மேற்பட்ட ஆக்கிரமிப்பு படைகள் இஸ்ரேலிய மொசாட்டினாலும், ஏனைய சர்வதேச பயங்கரவாத படைகளாலும் பயிற்றப் பட்டவர்களாவர்.

இந்தத் தளம் மக்கள் விடுதலைப் படையால் முன்பும் தாக்கப்பட்டது. இதன்பின் பலத்த பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நவீன ஆயுதங்களும் குவிக்கப்பட்டன; எந்த நேரமும் மீண்டும் விடுதலைப் போராளிகள் தாக்குதல் நடத்தலாம் எனக்கருதி கடற்படைக் குண்டர்கள் உஷாராக இருந்தனர். இந்த நிலையில் மக்கள் விடுதலைப்படையினர் மிக நவீன ஆயுதங்களை பயன்படுத்தி **மீண்டும்** இந்தத் தளம் மீது உக்கிர மான தாக்குதல் நடத்தினர்.

மக்கள் விடுதலைப் படையின் தாக்குதலை சமாளிக்க கெலிகாப்டர்கள் மூலமும், கயபாகு வீரய்யா, சூரய்யா போன்ற நவீன போர்ப்படகு களிலிருந்தும் ஆக்கிரமிப்பு படைகள் பதில் தாக்குதல் நடத்தினர். தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்து அதிகாலை 4-40 மணி வரை மக்கள் விடுதலைப்படை வீரர்கள் போரிட்டனர். இங்குள்ள 35 கட்டடங்கள் தகர்க்கப்பட்டதுடன், 152-க்கு மேற்பட்ட எதிரிப் படைகள் மாய்க்கப்பட்டனர், இங்கு இருந்த உப்பு



**தோழர் கணேஷ்**



**தோழர் வேலு**



**தோழர் சின்னவன்**

**கௌரவப் பிரஜைகளாய்**
**களத்து மேட்டில் மடிந்த வீரர்கள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீரை நல்ல நீராக்கும் இயந்திரம் தகர்க்கப்பட்டது. இதன் பெறுமதி இரண்டு கோடி ரூபாவாகும்.

இதுவரை நடைபெற்ற தாக்குதலில் மிகப் பெரிய தாக்குதல் என்று சிறீலங்கா அரசின் கட்டுப் பாட்டில் உள்ள ''ரூபவாகினி செய்தி'' ஒப்புக் கொண்டது. இந்த உண்மையை ஒப்புக் கொண்ட அரசு தனது தரப்பில் உள்ள பலவீனங்களை மறைக்க எண்ணி தவறான தகவல்களை வழங்கியது 28 போராளிகள் கொல்லப்பட்டதாகவும், 3 கடற் படையினர் மாண்டதாகவும் அரசு கூறியது. ஆனால் மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த 5 ஆண் தோழர்களும், ஒரு பெண் தோழரும் மட்டுமே வீரமரணமடைந்தனர். 5 பேர் காய மடைந்தனர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினரும், மக்கள் விடுதலைப்படை கப்ரனுமான திருக்கோணமலையைச் சேர்ந்த தோழர் சின்னவன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினரும், மக்கள் விடுதலைப் படை கப்ரனுமான தோழர் கணேஸ் (மட்டுநகர்) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப் பினரும் மக்கள் விடுதலைப்படை கப்ரனுமான தோழர் வேலு (மட்டுநகர்) 2-வது தாக்குதல பிரிவு தலைவன் ரஞ்சன் (யாழ்நகர்) மக்கள் விடுதலைப் படை வீரர்கள் தவராஜா, பெண் போராளி வதனி ஆகியோரே வீரமரணடந்தவர்களாவர்.

இத்தாக்குதல் நடைபெற்றபோது குருநகர் இராணுவ முகாம், யாழ் கோட்டை பொலிஸ் நிலையம் போன்றவற்றின் மீதும் மக்கள் விடுதலைப் படையினர் தாக்குதல நடத்தினர். கடற்படைக்கு உதவியாக இங்குள்ள எதிரிப்படைகள் வெளி யேறாது தடுக்கவே இவ்வாறு செய்ததாகவும், வீதிகளிலும் தாக்குதலுக்கு தயாராக தமது வீரர்கள் நின்றதாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கூறியுள்ளது. தாக்குதல நடத்தியவர் களிடம் செய்தித் தொடர்புகள் ஒழுங்கு முறையில் இருந்ததாகவும், இது பெரியதாக்குதல் என்றாலும் இதைவிட பெரிதாக தீவீரவாதிகள் தாக்குவது கடினம் என்றும் சிறீலங்கா அரசு கூறியதாக பி. பி. சி. வானொலி கூறியது.

### பேருந்து வண்டி தீக்கிரை பயணிகள் மீது காடைத்தனம்!

மே 5 : கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து வண்டி சிங் களக் காடையரால் தீ வைக்கப்பட்டு முற்றாக எரிக்கப்பட்டது. இவ்வண்டியில் வந்த தமிழர்களின் உடைமைகள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டன. சிலாபத்தில் வைத்தே சிங்களக் காடையர் இந்த வண்டியை தீ வைத்தனர். இதில் வந்த இரு தமிழ் பெண்களையும் காடையர் அவமானப்படுத்தினர். ஏனையோரை கடுமையாக தாக்கியுமுள்ளனர்.

❋ ❋ ❋

## மலையக மண்ணை வளமாக்கிய கரங்கள் யாருடையவை?

### அந்நியச் செலவாணியை அள்ளித்தரும் மக்கள் மீது அடுக்கடுக்கான வன்முறைகள் ஏவப்படுகின்றன...

துவேச உணர்வு கொண்ட அரசியல்வாதிகள் காரணமாக வடக்கு, கிழக்கு பகுதி மக்கள் பல வருட மாக சீண்டப்பட்டனர். பாரபட்சத்துக்கு உள்ளா கினர். இப்போது மலையகமக்களும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்படுகின்றனர். மலையகப் பகுதி வாழ் தமிழ் மக்களை அடிமைகளாக நடத்த சிலர் கனவு காண்கின்றனர். அடிமைகளாக அடங்கி வாழ நாம் தயாராக இல்லை. இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி புசல்லாவை நயாபத்தனை தோட்டத்தில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். செல்லச்சாமி தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது இன் றைய மலையகத்தை உருவாக்கியது யார்? மலையகத் தமிழர்மீது இளவாத சேற்றை வீசுவோருக்கு இந்தச் சரித்திரம் தெரியுமா? எமது மூதாதையர்கள் வெள் ளையனால் இங்கு அடிமைகளாக கொண்டு வரப் பட்டனர். அப்போது இன்றைய பசுமையான தேயிலையும், ரப்பரும் இருக்கவில்லை. பயங்கரமான மிருகங்கள் வாழும் காடாகவே மலையகம் இருந்தது. இன்றைய பசுமையான மலையகத்தை உருவாக்கி, அந்நியச் செலவாணியை அள்ளித்தரும் தமிழர்கள் மீது வன்முறை நடத்தும் பரம்பரை காலம், கால மாக நன்றிக்கடன்பட்டவர்கள் நன்றிக்கடனுக்கு பதி லாக நச்சுவாயுவைக் கக்குவதா? எமது மக்கள் முதுகு முறிய உழைத்தபோது உதைக்கப்பட்டனர், உடமை கள் இழந்தனர். இவ்வாறு எம். எஸ். செல்லச்சாமி தனது உரையில் குறிப்பிட்டார்.

www.tamilarangam.net







கனவில் கூட கண்டிராத கோரமாய் குமுதினிப் படகில் நடந்த கொடூரம்.............
சின்னம் சிறுவனின் பிஞ்சு மேனியையும் துப்பாக்கி ரவைகள் சல்லடையாக்கின......

# இரத்த வெறி கொண்ட இனவெறி ஓநாய்கள்

## குமுதினிப் படகில் கொலை வெறி வேட்டை

மே 15, நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவானுக்கு சென்று கொண்டிருந்த பயணிகள் அடங்கிய இயந்திர வள்ளம் நடுக்கடலில் வைத்து சிறீலங்கா கடற்படை கூலிகளால் தடுக்கப்பட்டது. இரண்டு இயந்திரபடகுகளில் துப்பாக்கிகளுடனும், கத்திகளுடன் வந்த கடற்படைக்குண்டர்கள் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த குமுதினிப்படகை நிறுத்துமாறு எச்சரித்தனர். உடன் வள்ளம் நிறுத்தப்பட்டது. கூலிக் குண்டர்கள் கொலைவெறியுடன் குமுதினிப் படகுக்குள் பாய்ந்தனர். அடையாள அட்டை காட்டுமாறு கேட்ட ஆக்கிரமிப்பு படை குண்டர்கள் பயணிகள் அடையாள அட்டை காட்டியபோது கைக்கோடாலிகளாலும், கத்திகளாலும் தாக்கத் தொடங்கினர், ஐயோ, ஐயோ என்று படகில் இருந்தவர்கள் அலறியபோது கூலிப் படை குதூகல உணர்வுடன் தொடர்ந்து தாக்கியது, மூன்று வயது சிறுமியை தலைமயிரில் பிடித்து தூக்கி கைக்கோடாலியால் வெட்டினர். மற்றொரு சிறுவனை துப்பாக்கி குண்டுகளுக்கு தீனியாக்கினர். இந்த குரூர வெறியாட்டத்தினால் 33 பேர் பலியாகினர். 35 பேர் படுகாயமடைந்தனர். இதுதவிர கொல்லப்பட்ட பலர் கடலில்வீசப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.



www.tamilarangam.net



## சிங்களமக்களின் போராட்டத்துக்கு உறுதுணையாக நிற்போம்!

### அப்பாவி சிங்களமக்கள் கொல்லப்படுவதை கண்டிக்கிறோம்

மே, 17, EPRLF, LTTE, EROS, TELO ஆகியன கூட்டாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், அனுராத புரத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்திருப்பதுடன், தங்களது இயக்கங்களின் ஆயுதப் பிரிவினருக்கும் இச்சம்பவத்திற்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது எனவும் தெளிவாகக் கூறியுள்ளன.

மேலும் அவ் அறிக்கையில் எமது புரட்சிகர ஆயுதப்போராட்டமானது சிறீலங்கா அரசிற்கும், அதன் ஒடுக்கு முறை அரச இயந்திரங்களுக்கும் எதிராகவே தொடுக்கப்படுகின்றது எனவும் குறிப்பாக, எமது தாயகத்தை ஆக்கிரமித்து தமிழ் பேசும் மக்களின் மீது இனக்கொலைக்கான யுத்தத்தைத் தொடுத்துள்ள, ஆயுதப்படையினருக்கு எதிராகவே எமது போராட்டம் நடத்தப்படும் எனவும் கூறியுள்ளன.

அப்பாவி சிங்களப் பொதுமக்களும் சிறீலங்கா பாசிச அரசினால் சுரண்டலுக்கும் அடக்கு முறைக்கும் உட்படுத்தபடுகிறார்கள் என்பதையும், எமது அனுதாபமும், ஆதரவும், என்றும் உழைக்கும் சிங்கள மக்களுடன் இருக்கும் என்பதையும், சிறீலங்கா சர்வாதிகார அரசுக்கெதிரான அவர்களது போராட்டங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்பதையும் இந்நேரத்தில் கூற விரும்புகிறோம் எனவும் அவ்வறிக்கை கூறுகின்றது.

### சிறீலங்கா மண்ணில் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்

சிறீலங்காவில் மதவாச்சி என்னுமிடத்திலுள்ள பொலிஸ் நிலையம் மீது ஈழக் கொரில்லாக்கள் தாக்குதல் நடத்தினர். ஈழப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நடத்தியே தீருவேன் என்று சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சன் அத்துலத் முதலி கொக்கரித்திருந்தான். இதற்கு பதிலடி கொடுப்பதுபோல் முதன் முதலாக சிறீலங்கா பகுதியிலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றை ஈழக்கொரில்லாக்கள் தாக்கினர். தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த வெற்றிகரமான இராணுவ தாக்குதலில் ஒன்பது கூலிப்படைக் குண்டர்கள் மாண்டனர். இதே சமயம் மதவாச்சி ரயில்நிலையம் மீதும் குண்டுகள் வீசப்பட்டன.

## இந்திய-சோவியத் தலைவர்கள் ஆலோசனை!

### சிறீலங்காவில் அமெரிக்காவின் நுழைவு போர்களமாகும் இந்துமாக்கடல்!

உலக சமாதனத்துக்கு பெரும் துணைபுரியும் இந்திய-சோவியத் உறவு ஏகாதிபத்திய சதிவலைகளை தகர்த்து மேலும், மேலும் வலுப்பெற்று வருகிறது. இந்தியாவின் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சோவியத் யூனியனுக்கு சென்றுள்ளார். சோவியத் நாட்டின் தலைவர் கோர்பசோவ் உடன் திரு ராஜீவ்காந்தி சர்வதேசப் பிரச்சனைகள் பற்றியும் உலக சமாதானத்துக்கு ஏற்பட்டுவரும் அச்சுறுத்தலை பற்றியும் விவாதித்தார். இலங்கைத் தீவில் வெடித்து கிளம்பியுள்ள ஈழம் போராட்டம் பற்றியும், சிறீலங்கா அரசுக்கு முட்டுக்கொடுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், அதன் கூட்டாளிகளதும் தலையீடுகள் இந்துமாக்கடலை போர்க்களமாக்கி வரும் அபாயம் குறித்தும் இரு நாட்டு தலைவர்களும் மிகவும் ஆழமாக விவாதித்ததாக தெரியவருகிறது. சோவியத் யூனியன் இலங்கைப் பிரச்சனையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தலையிடக்கூடாதென்றும், இந்தியாவின் ஆக்கபூர்வமான முயற்சிகள் மூலம் தீர்வு ஏற்படவேண்டும் என்றும் வலியுறுத்திவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### கூலிப்படைகள் துப்பாக்கிப் பிரயோகம்! ஈழமீனவர்கள் வதைமுகாமில்

மே 5: நவாந்துறை கடற்கரைப் பகுதியில் நண்பகல் 12 மணியளவில் இராணுவத்தினர் 13 மீனவர்களை கைது செய்து வதை முகாமுக்கு இழுத்துச் சென்றுள்ளனர். இந்த மீனவர்கள் 25க்கும் 35 வயதுக்கும் உட்பட்டவர்கள். தமது அன்றாட ஜீவனத்துக்கு தொழில் செய்யச் சென்று வந்து நவாந்துறை பரலோக மாதா கோயிலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த இவர்களை கூலிப்படைகள் கைது செய்தன. இவர்கள் கைது செய்யப்பட்டதை அறிந்த உறவினர்களும், தாய்மாரும் இராணுவ முகாம் சென்று அங்கிருந்த அதிகாரி ஒருவனிடம் தமது நிலைமையை அழுதழுது கூறினார்கள். விரைவில் விடுதலை செய்கிறோம் என்று அந்த அதிகாரி கூறினான். ஆனால் இதுவரை கைது செய்யப்பட்ட மீனவர்கள் எவரும் விடுதலை செய்யப்படவில்லை.

www.tamilarangam.net



# ஈழத்தேசிய விடுதலை முன்னணி, தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இணைவு

## விடுதலை அமைப்புகளின் ஐக்கியம் வலுக்கையில் ஈழப்போராட்டம் வீறு கொண்டெழுகிறது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம். ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்னும் பிரதானமான ஈழ விடுதலை அமைப்புகள் ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) என்னும் பெயருடன் கூட்டமைப்பாக செயல்பட்டு வந்தன. இப்போது ஈழதேசிய விடுதலை முன்னணியும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் இணைந்து செயல்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் அதனால் தலைமை தாங்கப்படும் சர்வதேச பிற்போக்கு கும்பல்களதும் பின்பலத்துடன் சிறீலங்கா நவபாசிச முதலாளித்துவ அரசு ஈழ மக்கள் மீது படுகொலைகளை கட்டவிழ்த்துள்ளது. தனது ஆயுதப் படைகளை நவீனப்படுத்தி, நாசகாரத்திட்டங்களுடன் படுகொலை யுத்தத்துக்கான தயாரிப்பில் ஈடுபட்டுவரும் சிறீலங்கா ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக ஆயுதம் தாங்கி போரிடும் அமைப்புக்கள் ஐக்கியப்படவேண்டியது வரலாற்று தேவையாகிவிட்டது. இந்த உண்மையை அனுபவரீதியாக கண்டறிந்து, ஈழத்தின் எதிரிகளை சமர்க்களத்தில் புறம்காண விடுதலை அமைப்புக்கள் ஐக்கியப்பட்டு அணிவகுத்து வருகின்றன. ஈழத் தேசிய விடுதலை முன்னணியும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் இணைந்து செயல்படுவதென தீர்மானிக்கப்பட்ட செய்தி ஈழத்து மக்களையும் அவர் தம் நேச சக்திகளையும் புத்துணர்வு பெற வைத்துள்ளது. விடுதலை அமைப்புக்களை பலவீனமாக்கி ஈழப் போராட்டத்தின் குரல்வளையை நெரிக்க திட்டமிடுகின்ற ஈழத்தின் பகைவர்களுக்கு விடுதலை அமைப்புக்களின் ஐக்கியம் வலுவடைகிறது என்கின்ற செய்தி பேரிடியை வழங்கி உள்ளது.



தோழர்கள் சிறீசபாரத்தினம், பத்மநாபா, பிரபாகரன், பாலகுமார்

## "சீனா, பிரிட்டன், பாகிஸ்தான் நவீன ஆயுதங்களை அள்ளித்தரும் நண்பர்கள்!"

## சிறீலங்கா அரசே ஒப்புக்கொள்கிறது

மே. 20 ஈழப் போராளிகளை வேட்டையாட, பாக்,ஜலசந்தியில் தனது வாலை நீட்ட சீனாவிடம் இருந்து நவீனரக ரோந்துப்படகுகளை சிறீலங்கா அரசு பெற்றுக்கொள்கிறது. ராடார் இணைப் போடு இயந்திர துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட 9 அதிவேக ரோந்துப் படகுகளை பிரிட்டன் சிறீலங்காவிற்கு வழங்குகிறது. சிறுவகை ராக்கெட்டுகள் உட்பட பல சிறு ஆயுதக் கருவிகளை பாகிஸ்தான சிறீலங்காவிற்கு கொடுத்துள்ளது. அமெரிக்காவின இராணுவக் கூட்டாளிகளான இந்த நாடுகள் வழங்கும ஆயுதங்கள் ஏற்கனவே உபயோகப்படுத்தப் பட்டு வருகின்றன. சிறீலங்கா அரசின உயர் அதிகாரி ஒருவர் இந்த நாடுகளிடம இருந்து ஆயுதங்களை பெற்று உபயோகிக்கும உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார்.

### கூலிப்படைகளிடம் கட்டுப்பாடு இல்லையாம்! நவபாசிஸ்ட் ஜே. ஆர். ஆழ்ந்த கவலை!

இராணுவத்தில் கட்டுப்பாடு இல்லை என்றும், அரசாங்கத்தின் உத்தரவுப்படி அவை நடப்பதில்லை என்றும் சிறீலங்கா ஜனாதிபதி நவபாசிஸ்ட் ஜே.ஆர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். சிறீலங்காவில நடைபெற்ற விழாவொன்றில் ஜேர். ஆர். இதை தெரிவித்தார். தக்க ஒழுங்கு கட்டுப்பாடு இல்லை என்றால் பயங்கரவாதிகளை வெற்றி கொள்ள இயலாது என்றும், அவர்களை போரில் முறியடிப்பது முடியாத காரியமாகிவிடும் எனவும் ஜே. ஆர். கூறியிருக்கிறார்.

www.tamilarangam.net



# கிளிநொச்சி பொலிஸ்-இராணுவ கூட்டு முகாம் மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தாக்குதல்

பெப். 28 கிளிநொச்சியிலுள்ள பொலிஸ்–இராணுவ கூட்டு முகாம் மீது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் படையான மக்கள் விடுதலைப் படையினர் (PLA) தாக்குதல் நடத்தினர். 150க்கு மேற்பட்ட ஆக்கிரமிப்பு படையினர் இந்த முகாமில் இருந்தனர். இரவு இரண்டு மணிக்கு ஆரம்பமான மக்கள் விடுதலைப் படையின் தாக்குதல் அதிகாலை ஐந்து மணிவரை நீடித்தது. மக்கள் விடுதலைப் படைக்கும், சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகளுக்குமிடையே கடுமையான சமர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்த சிறீலங்கா இராணுவம் மோட்டார் குண்டுகள் மூலம் முகாமுக்குள் இருந்தவாறு தாக்குதல் நடத்தியது. இவற்றின் மத்தியிலும் உறுதி குலையாது வீரமுடன் போரிட்ட மக்கள் விடுதலை படையால் **70ற்கு மேற்பட்ட ஆக்கிரமிப்பு படையினர் கொல்லப்பட்டனர்.** பலர் படுகாயமுற்றனர். இத்தாக்குதலின்போது ஏனைய முகாம்களில் இருந்து இராணுவம் வெளியேறாது தடுக்கவும், அந்த பிரதேசத்தை எதிரிப் படைகளின் தாக்குதலில் இருந்து தடுக்கவும் ஆனையிறவு, பூநகரி, முறிகண்டி வீதிகள் மக்கள் விடுதலைப் படையால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டிருந்தன.

நவீனமயப்படுத்தப்பட்டு வரும் ஆக்கிரமிப்புப் படைகளை பலவீனப்படுத்த இத்தகைய இடைக்காலத் தாக்குதல்கள் அவசியமாகின்றன என்றும், சிறீலங்கா நவபாசிச அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், அதன் அடிவருடிகளதும் உதவிகளை பெற்றுக் கொண்டபோதும் எங்கள் மக்கள் விடுதலைப்படை ஒடுக்குமுறையாளருக்கு தொடர்ந்தும் பதிலடி கொடுக்கும் என்று **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி** (EPRLF) தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் பற்றிய செய்திகளை மூடி மறைக்க சிறீலங்கா அரசு தீவிர முயற்சி எடுத்தது. கொல்லப்பட்ட தனது கூலிப் படைகளை ஹெலிகாப்டர்கள் மூலம் சிறீலங்கா பகுதிகளுக்கு உடன் எடுத்துச் சென்றது. காயப்பட்ட எதிரிப்படைகளுக்கு சிகிச்சையளித்த டாக்டர்களுக்கும், நர்சுகளுக்கும், தமிழ் பொலிசாருக்கும் உண்மை நிலையை வெளியே யாருக்கும் தெரிவிக்கக் கூடாது என்று கடுமையான எச்சரிக்கை விடப்பட்டது. 15 முறை ஹெலிக்காப்டர் மூலம், கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் சிறீலங்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதுதவிர பூநகரி இராணுவ முகாமிலிருந்து தருவிக்கப்பட்ட இராணுவ பொலிஸ் குண்டர்களை கிளிநொச்சி கூட்டு முகாமுக்குள் நிரப்பிவிட்டு யாருமே கொல்லபடாததுபோல் காட்டுவதற்கு படுகொலை அரசு படாத பாடு பட்டுள்ளது.



இந்த தாக்குதலால் அதிர்ச்சியடைந்த சிறீலங்கா தேசியபாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி மறைந்திருந்து தாக்குவதை விடுத்து இப்போது ''பயங்கரவாதிகள்'' **நேருக்கு நேர் மோதும் பாணியை** கடைப்பிடிக்க தொடங்கிவிட்டார்கள் என்று கூறியுள்ளான்.

## வீடுதலைப் போரின் திசைவழி என்ன ?

G. U. E. S.

ஈழத்தில் பரிட்சைக்கு செல்லும் மாணவர்களை துப்பாக்கி காட்டி மிரட்டுவதிலும், பரீட்சை மண்டபங்களுக்குள் புகுந்து வினாத்தாள்களை பறித்துச் செல்வதிலும் சில தீயசக்திகள் ஈடுபட்டுவருகின்றன. விடுதலை போராட்டம் பற்றிய எவ்விதமான தெளிவான நிலைப்பாடும் அற்ற இத் தீயசக்திகள் மக்களின் நலன்களுக்கு எதிராக தமது துப்பாக்கிகளை தூக்கியபடி அலைகின்றன. இது தொடர்பாக ஈழமாணவர் பொது மன்றம் (GUES) துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நமக்கு தரப்படுத்தல், வெள்ளையறிக்கை, கலவரங்கள், நூலக எரிப்புக்கள், பாடசாலைகளை குண்டு வைத்தல், பாடசாலைகளில் மூகாம்களை அமைத்தல், நாளாந்தம் மாணவர்களைக் கைது செய்தல் என்பவை காதுகளை எட்டியதும், எட்டுகின்றதுமான செய்திகள், நமது சகோதர மாணவர்களின் சாம்பல் பூத்த மேடுகளில் கால் போட்டு நடக்கும் காலமிது. சிறீலங்கா கல்வியமைச்சு எங்கள் கல்வி வளர்ச்சியை திட்டமிட்டு புறக்கணித்து, இதற்கான நிதியைக்கூட பாதுகாப்பு நிதியாக விரயமாக்கி வருகின்றது, நமது பாடசாலைகளில் கல்வி கற்க பெரும் தொல்லைகள், இதன் மத்தியிலும் பாடசாலைகளைப் பாதுகாத்து, கல்வி வளர்ச்சியை பேணுவது ஒவ்வொரு குடிமகனதும் கடமையாகும். ஆனால் சிலர் பரீட்சைகளை குழப்பி வருகின்றனர். மேலும் மேலும இதை அறியாது தொடர்ந்து பரீட்சைகளை குழப்புவோமேயானால் எதிர்கால வரலாற்றை சரியாக எடைபோட முடியாதவர்கள் ஆவோம். இவ்வாறு ஈழ மாணவர் பொது மன்றம் கூறியுள்ளது.

www.tamilarangam.net



# கிளிநொச்சி பொலிஸ்-இராணுவ கூட்டு முகாம் மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தாக்குதல்

பெப். 28 கிளிநொச்சியிலுள்ள பொலிஸ்–இராணுவ கூட்டு முகாம் மீது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் படையான மக்கள் விடுதலைப் படையினர் (PLA) தாக்குதல் நடத்தினர். 150க்கு மேற்பட்ட ஆக்கிரமிப்பு படையினர் இந்த முகாமில் இருந்தனர். இரவு இரண்டு மணிக்கு ஆரம்பமான மக்கள் விடுதலைப் படையின் தாக்குதல் அதிகாலை ஐந்து மணிவரை நீடித்தது. மக்கள் விடுதலைப் படைக்கும், சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகளுக்குமிடையே கடுமையான சமர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்த சிறீலங்கா இராணுவம் மோட்டார் குண்டுகள் மூலம் முகாமுக்குள் இருந்தவாறு தாக்குதல் நடத்தியது. இவற்றின் மத்தியிலும் உறுதி குலையாது வீரமுடன் போரிட்ட மக்கள் விடுதலை படையால் **70க்கு மேற்பட்ட ஆக்கிரமிப்பு படையினர் கொல்லப்பட்டனர்.** பலர் படுகாயமுற்றனர். இத்தாக்குதலின்போது ஏனைய முகாம்களில் இருந்து இராணுவம் வெளியேறாது தடுக்கவும், அந்த பிரதேசத்தை எதிரிப் படைகளின் தாக்குதலில் இருந்து தடுக்கவும் ஆனையிறவு, பூநகரி, முறிகண்டி வீதிகள் மக்கள் விடுதலைப் படையால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டிருந்தன.

நவீனமயப்படுத்தப்பட்டு வரும் ஆக்கிரமிப்புப் படைகளை பலவீனப் படுத்த இத்தகைய இடைக்காலத் தாக்குதல்கள் அவசியமாகின்றன என்றும், சிறீலங்கா நவபாசிச அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், அதன் அடிவருடிகளதும் உதவிகளை பெற்றுக் கொண்டபோதும் எங்கள் மக்கள் விடுதலைப்படை ஒடுக்குமுறையாளருக்கு தொடர்ந்தும் பதிலடி கொடுக்கும் என்று **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி** (EPRLF) தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் பற்றிய செய்திகளை மூடி மறைக்க சிறீலங்கா அரசு தீவிர முயற்சி எடுத்தது. கொல்லப்பட்ட தனது கூலிப் படைகளை ஹெலிகாப்டர்கள் மூலம் சிறீலங்கா பகுதிகளுக்கு உடன் எடுத்துச் சென்றது. காயப்பட்ட எதிரிப்படைகளுக்கு சிகிச்சையளித்த டாக்டர்களுக்கும், நர்சுகளுக்கும், தமிழ் பொலிசாருக்கும் உண்மை நிலையை வெளியே யாருக்கும் தெரிவிக்கக் கூடாது என்று கடுமையான எச்சரிக்கை விடப்பட்டது. 15 முறை ஹெலிக்காப்டர் மூலம், கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் சிறீலங்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதுதவிர பூநகரி இராணுவ முகாமிலிருந்து தருவிக்கப்பட்ட இராணுவ பொலிஸ் குண்டர்களை கிளிநொச்சி கூட்டு முகாமுக்குள் நிரப்பிவிட்டு யாருமே கொல்லபடாததுபோல் காட்டுவதற்கு படுகொலை அரசு படாத பாடு பட்டுள்ளது.



இந்த தாக்குதலால் அதிர்ச்சியடைந்த சிறீலங்கா தேசியபாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி மறைந்திருந்து தாக்குவதை விடுத்து இப்போது ''பயங்கரவாதிகள்'' **நேருக்கு நேர் மோதும் பாணியை** கடைப்பிடிக்க தொடங்கிவிட்டார்கள் என்று கூறியுள்ளான்.

## *விடுதலைப் போரின் திசைவழி என்ன ?*

G. U. E. S.

ஈழத்தில் பரீட்சைக்கு செல்லும் மாணவர்களை துப்பாக்கி காட்டி மிரட்டுவதிலும், பரீட்சை மண்டபங்களுக்குள் புகுந்து வினாத்தாள்களை பறித்துச் செல்வதிலும் சில தீயசக்திகள் ஈடுபட்டுவருகின்றன. விடுதலை போராட்டம் பற்றிய எவ்விதமான தெளிவான நிலைப்பாடும் அற்ற இத் தீயசக்திகள் மக்களின் நலன்களுக்கு எதிராக தமது ' துப்பாக்கிகளை தூக்கியபடி ' அலைகின்றன. இது தொடர்பாக ஈழமாணவர் பொது மன்றம் (GUES) துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நமக்கு தரப்படுத்தல், வெள்ளையறிக்கை, கலவரங்கள், நூலக எரிப்புக்கள், பாடசாலைகளை குண்டு வைத்தல், பாடசாலைகளில் மூகாம்களை அமைத்தல், நாளாந்தம் மாணவர்களைக் கைது செய்தல் என்பவை காதுகளை எட்டியதும், எட்டுகின்றதுமான செய்திகள், நமது சகோதர மாணவர்களின் சாம்பல் பூத்த மேடுகளில் கால் போட்டு நடக்கும் காலமிது. சிறீலங்கா கல்வியமைச்சு எங்கள் கல்வி வளர்ச்சியை திட்டமிட்டு புறக்கணித்து, இதற்கான நிதியைக்கூட பாதுகாப்பு நிதியாக விரயமாக்கி வருகின்றது, நமது பாடசாலைகளில் கல்வி கற்க பெரும் தொல்லைகள், இதன் மத்தியிலும் பாடசாலைகளைப் பாதுகாத்து, கல்வி வளர்ச்சியை பேணுவது ஒவ்வொரு குடிமகனதும் கடமையாகும். ஆனால் சிலர் பரீட்சைகளை குழப்பி வருகின்றனர். மேலும் மேலும இதை அறியாது தொடர்ந்து பரீட்சைகளை குழப்புவோமேயானால் எதிர்கால வரலாற்றை சரியாக எடைபோட முடியாதவர்கள் ஆவோம். இவ்வாறு ஈழ மாணவர் பொது மன்றம் கூறியுள்ளது.

www.tamilarangam.net



**சரத் முத்வேட்டுகம அம்பலப்படுத்துகிறார்.**

## கொலைக்கும்பலுக்கு கொழும்பில் விருந்து!

## மதரீதியான மோதலுக்கு தூபமிடுவது யார்?

மட்டக்களப்பில் தமிழ் பேசும் மக்களிடையே மதரீதியான மோதலை உருவாக்க சிறீலங்கா படுகொலை அரசு திட்டமிட்டு வருகிறது. முஸ்லீம் மக்களை ஏனைய தமிழ் பேசும் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்த இஸ்ரேலிய மொசாட்டின் ஆலோசனையின் பேரில் சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்கள் செயல் பட்டுவருகிறார்கள்.

சிறீலங்கா பாராளுமன்றத்தில் அவசரகால சட்டத்தை நீடிக்கும். பிரேரனை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய சிறீலங்கா கம்யுனிஸ்ட் கட்சி உறுப்பினர் சரத் முத்வேட்டுகம மட்டகளப்பு சம்பவங்கள் பற்றி அம்பலப்படுத்தினார். மட்டக்களப்பில் நடக்கும் சம்பவங்களுக்கு சிறீலங்கா அரசாங்கமும் இஸ்ரேலும் பின்னணியில் இருப்பதாக சரத் குற்றம் சாட்டினார்.

அமைச்சர் தொண்டமான் மட்டக்களப்பு கலவரங்களுக்கு காரணமானவர்கள் சிங்களப் பகுதி களிலிருந்து பேருந்து வண்டிகளில் அனுப்பிவைக்கப்பட்டனர் என்று கூறியதை சரத் சுட்டிக்காட்டினார்.

அரசு இன்று நிலைமையை கட்டுப்படுத்த முடியாமல் திணறுகிறது. அணிசேரா நாடுகளின் தலை நகரில் இஸ்ரேலியருக்கு விருந்து வைப்பது வெட்கக்கேடு என்றும், தென் ஆபிரிக்காவிடம் ஆயுத கொள்வனவு செய்ய என். யு. ஜெயவர்த்தனாவை அரசு அனுப்பிவைத்துள்ளது என்றும் சரத் முத்வேட்டுகம தனது உரையில் குறிப்பிட்டார்.

## இலங்கைத்தீவின் பல பகுதிகள் அமெரிக்காவிற்கு தாரைவார்ப்பு

''ஈழம் விடுதலை பெற்றால் இலங்கைத்தீவின் ஒரு பகுதி தான் விடுபட்டுப்போகும். ஆனால் அமெரிக்காவுடன் ஜே. ஆர். வைத்துள்ள தொடர்புகளினால் பல்வேறு பகுதிகள் வெளிநாட்டினருக்குப் போகின்றன'' என்று சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சரத் முத்வேட்டுகம சிறீலங்கா பாராளு மன்றத்தில் கூறியுள்ளார். மேலும் அவர் பேசுகையில், ''எமது நாட்டின் வளம் வெளிநாட்டினருக்கு தாரை வார்க்கப்படுகிறது. அதனை ஈழவிடுதலைப் போராளிகள் செய்யவில்லை. ஜெயவர்த்தனா அரசாங்கமே எமது வளங்களை பல்தேசிய கம்பனிகளுக்குக் கொடுத்துள்ளது. அமெரிக்க குரலுக்கு (Voice of Amerika) 1000 ஏக்கரை கொடுத்தமையினால் இந்தியாவில் இலங்கைக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

தமிழ் தீவிரவாதிகளை கொள்ளையர்கள், பயங்கரவாதிகள் எனக் கூறுகின்றார்கள். ஆனால் அவர்கள் தாக்கிவிட்டு ஓடி ஒளியும் தந்திரத்தைக் கடைப்பிடிக்கும் கொரில்லாக்கள் தான். கம்பூச்சிய கொரில்லாக்களும் இவ்வாறே செயற்படுகிறார்கள்.' என்று கூறினார் மேலும் அனில்முணசிங்க பேசுகையில், ''இராணுவத்தின் பலம் அதிகரித்திருக்கிறது. அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள் என ஆளும்கட்சி அமைச்சர்கள் கூறுகிறார்கள். ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மதவாச்சிவரை வந்த தீவிரவாதிகளும் முன்னேற்றம் அடையவில்லையா'' என வினவினார். அத்துடன், தீவிரவாதிகள் தெரிவிக்கும் கருத்துக்களில் நியாயம் இருப்பதாகப் பலர் எண்ணுகிறார்கள்.'' என்று குறிப்பிட்டார்



**மனிதரை வெறுக்கும் இனவெறி ஓநாய்களால் நரபலியான ஈழக் குடிமகன்...**

www.tamilarangam.net

# 11

## நவபாசிஸ்டுக்களின் நாசகார சதியை முறியடிப்போம்
## தமிழ் பேசும் மக்களே! ஒன்றுபட்டு கிளர்ந்தெழுவோம்

***TELO, EROS, LTTE, EPRLF* அறைகூவல்.**

ஈழத்துத் தமிழ் பேசும் மக்களிடையே பிளவை ஏற்படுத்தி, எமது விடுதலைப் போராட்டத்தை திசை திருப்பும் நோக்கத்தோடு ஸ்ரீலங்கா அரசு மத அடிப்படையில் மோதல்களைத் தூண்டி வருகின்றது. கடந்த சில நாட்களாக இலங்கையின் கிழக்குப் பகுதிகளில நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் சிங்கள இனவாத அரசின் நாசகார சதி முயற்சியால் உருவாக்கப்பட்டவையாகும். இஸ்ரேலிய உளவு ஸ்தாபனமாகிய 'மொசாட்டின்' சதியாலோசனையோடு இந்த நாசகார திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இஸ்லாமின் விரோதியான இஸ்ரேலுடன் கை கோர்த்துக் கொண்டிருக்கும் சிறீலங்கா அரசு ஈழ விடுதலைப் போராளிகளை முஸ்லீம் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற ரீதியில் விசமப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றது.

இஸ்லாமிய சமூகத்திலிருந்து எம்மை அந்நியப்படுத்தும் நோக்கில் கட்டவிழ்த்து விடப்படும் இந்தப் பிரச்சாரம் அபாண்டமானதோடு மிகவும் கேலிக் கூத்தானதாகும்.

விடுதலை இயக்கங்களின் ஆக்கப்பூர்வமான முயற்சிகளால் முஸ்லீம் மக்களுக்கும் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்கும் இடையே உறவுகள் வலுப்பெற்று வந்தன. முஸ்லீம் மக்களிடமிருந்து விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் மேலும் ஆதரவு திரண்டு வந்தது. இதனை கண்டு சிறீலங்கா ஆட்சியாளர்கள் திகிலடைந்தனர். ஸ்ரீலங்கா அரசு இஸ்ரேலுடன் நட்புறவு கொண்டமையால் ஆத்திரமடைந்த அரபு நாடுகள் தமது உதவியை நிறுத்தி வருகின்றன. பரந்துபட்ட முஸ்லீம் மக்களிடையே வளர்ந்து வரும் 'சியோநிச எதிர்ப்புணர்வை திசை திருப்புவதற்கும் எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கும் முஸ்லீம் நாடுகளிலிருந்து உதவிகளை பெறுவதற்குமாகவே சிங்கள பௌத்த இனவாத அரசு திட்டமிட்டு இந்த மோதல்களை தூண்டி வருகின்றது.

கடந்த வருடம் ஸ்ரீலங்கா அரசு எமது போராட்டத்தை நசுக்கும் நோக்குடன் இஸ்ரேலிய உதவியை நாடி இராஜ தந்திர உறவை ஏய படுத்திய போது முஸ்லீம் மக்கள் அதற்கெதிராக கிளர்ந்தெழுந்தனர் கிழக்கிலங்கையில் பரவலாகப் போராட்டம் வெடித்தது. இதை சகித்துப் கொள்ள முடியாத சிங்கள ஆட்சியாளர் அடக்கு முறை மூலம் அக் போராட்டங்களை மிருகத்தனமாக நசுக்க முயன்றனர் என்பதை முஸ்லீம் மக்கள் நன்கறிவர்.

பாலஸ்தீன மக்களின் நிலங்களை அபகரித்து அவர்களை அகதிகளாக்கி மனிதகுலத்தின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளருடன் ஸ்ரீலங்கா அரசு கூடிக்குலாவுகின்றது. பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை உறுதியாக ஆதரித்துவரும் தமிழீழ விடுதலைப் போராளிகளை முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறையாளர்கள் என்று சித்தரிக்க முயற்சிக்கும் சிங்கள அரசின் சதித்திட்டம் ஒரு போதும்வெற்றி பெறப் போவதில்லை. மத அடிப்படையில் தமிழ்பேசும் மக்களைப் பிளவு படுத்த ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் சதிமுயற்சிகளுக்கு பலியாகாது விழிப்பாக இருக்குமாறு நாம் தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

மதவேறுபாட்டுணர்ச்சியின்றி ஈழத் தமிழ் பேசும் மக்களிடையே காலம் காலமாக நிலவிவரும் பிரிக்க முடியாத உணர்வுகளை தொடர்ந்தும் பேணிப்பலப்படுத்தி எமது விடுதலையை வென்றெடுக்க உறுதியுடன் செயற்படுவோமாக.




**இஸ்ரரேல்சியோனிஸ்டுக்கள் இலங்கையில் நுழைவதை எதிர்த்துப் போராடிய முஸ்லீம் மக்கள்**

www.tamilarangam.net



சோவியத் மக்களின் இணையற்ற தியாகம்

## பாசிச வீழ்ச்சியின் 40 ஆண்டுகள்

கோவையில் உலகப் பாசிசத்தை வெற்றிகொண்ட 40ம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம், இந்திய சோவியத் நட்புறவுக் கழகம், அகில இந்திய தொழிற் சங்க சம்மேளனம் ஆகிய அமைப்புக்கள் விழாவை ஏற்பாடு செய்தனர். இவ்விழாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநில செயலாளர் தோழர் பா. மாணிக்கம், துணைச் செயலாளர் தோழர் தா. பாண்டியன், தோழர் L.G. கீதானந்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் தோழர் ஈழமணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இங்கு தோழர் ஈழமணி உரையாற்றுகையில் உலகப் பாசிசத்தின் வெற்றி தோல்வி என்பது சோவியத் ஜெர்மன் போர்களங்களில்தான் தீர்மானிக்கப்பட்டது. உலகப் பாசிசத்தின் பிடியிலிருந்து மனித குலத்தை மீட்க சோவியத் மக்கள் செய்த தியாகமும், காட்டிய வீரமும் ஈடு இணையற்றவை என்று குறிப்பிட்டார்.

உலகப் பாசிசம் வீழ்த்தப்பட்டதை நினைவு கூரும் இவ்வேளையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், அதன் தலைமையில் இயங்கும் இராணுவ வெறிவாத நாடுகளிடமிருந்தும் உலக சமாதானத்துக்கு ஏற்பட்டு வரும் அச்சுறுத்தலை இட்டு நாம் விழிப்போடு செயல்பட வேண்டும். இந்திய துணைக்கண்டத்துக்குள் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஊடுருவ திட்டமிட்டு செயல்படும்போது இந்திய மக்கள் விழிப்போடு இருக்க வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும், சர்வதேச பிற்போக்கு சக்திகளையும் எதிர்த்து போராடும் ஈழ மக்களுக்கு ஆதரவு தருவது இந்திய மக்களின் வரலாற்று கடமை. இவ்வாறு ஈழமணி தனது உரையில் குறிப்பிட்டார்.

## ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு பம்பாயில் 80,000 நிதியளிப்பு
## பம்பாய்-ஈழ நட்புறவுக் கழகம் 55,000 முதல் கட்ட நிதி

ஈழமக்களின் வீரமிக்க விடுதலைப் போராட்டததை வலுப்படுத்த பம்பாய் ஈழ நட்புறவுக் கழகம் முதல் கட்டமாக 55,000/- நிதியளித்துள்ளது. பம்பாய் தமிழர் பேரவை நிறுவனர் மு. வரதராசனார் 25,000/- நிதி தொகையினை வழங்கினார் சண்முகானந்தா கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் தோழர் ஈழமணி பெற்றுக் கொண்டார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வீரர்கள் 500 பேர் சீருடை துணி வழங்கினார். நிகழ்ச்சிக்கு பம்பாய் ஈழ நட்புறவுக் கழகத் தலைவர் தைக்க துரை ஜெயராஜ் நாடார் அவர்கள் தலைமை தாங்கினார். பம்பாய் தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் முன்னிலை வகித்த இவ்விழாவில் பிரபல திரைப்பட இயக்குனர், டி. இராஜேந்தர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். குமணராசனின் வரவேற்புரைக்குப்பின் பம்பாய் ஈழ நட்புறவுக் கழக தலைவர் அப்பாத்துரை தலைமையுரையாற்றினார். இதனைத் தொடர்ந்து பம்பாய் ஈழ நட்புறவுக் கழக செயலாளர் பன்னீர் செல்வம் பேசினார். ஈழப்போராட்ட நிதியாக 1 லட்சம் ரூபாய் நிதி திரட்டி அளிக்க நட்புறவுக் கழகம் முடிவு செய்த தாகவும் இதில் முதல் கட்டமாக தற்போது 55,000 நிதியளிப்பதாகவும் பன்னீர் செல்வம் கூறினார். இன்னும் ஓரிருமாதத்தில் பாக்கித் தொகை 45,000 வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார். இதை யடுத்து பம்பாய் ஈழ நட்புறவுக் கழகத்தின் பொருளாளர்-தேவராசன் 55,000 ரூபாய் நிதியினை சிறப்பு விருந்தினர் இராஜேந்தர் மூலமாக ஈழமணி யிடம் வழங்கினார்.



கூலிப் படைகளின் கொலைவெறிக்கு தீனியான வயோதிப மாது

இந்நிதியினைத் திரட்ட பம்பாயில் அப்பாத் துரை, பன்னீர் செல்வம், தேவராசன், குமணராஜன் தெய்வேந்திரன், இராமலிங்கம், நெல்லைவளவன், இராஜகுரு, வர்க்கீஸ், முருகன், பதி, செம்மலை விஜயராகவன், மலர் அரசன், அல்பர்ட் ஆகிய தமிழ் அன்பர்கள் முன்னின்று உழைத்தனர். மற்றும் பம்பாய் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்தவர்களும் இந்நிதியினைத் திரட்டுவதற்கு பேராதரவு நல்கினர்.

www.tamilarangam.net



# இந்துமாக்கடலில் யுத்த மேகங்கள்

## அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதி முயற்சி !

ஏப்ரல் 30, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களில் ஒருவரான தோழர் எம். கல்யாணசுந்தரம் எழுதி சிவா பதிப்பகம் வெளியிட்டுள்ள கச்சதீவுப் பிரச்சனையும், ஈழத்தமிழர் போராட்டமும் என்னும் நூல் வெளியீட்டு விழா சென்னை மத்திய நூலகக் கட்டிடத்தில் நடைபெற்றது. இந்த நூலை பிரபல எழுத்தாளர் தோழர் ஜெயகாந்தன் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை சேர்ந்த தோழர் ஈழமணி பெற்றுக் கொண்டார்.

தோழர் தலித் தலைமையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் இந்திய சோவியத் நட்புறவுக் கழகத்தை சேர்ந்த தோழர் என். டி. வானமாமலை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலத் துணைத் தலைவர் தோழர் தா. பாண்டியன், தோழர் ஜெயகாந்தன், தோழர் ஈழமணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

தோழர் ஈழமணி இங்கு உரையாற்றும் போது, சிறீலங்கா நவபாசிச முதலாளித்துவ அரசின் ஆயுதப் படைகள் ஈழத்து மண்ணிலே கட்ட விழ்த்து விட்டுள்ள காட்டு மிராண்டித்தனமான அடக்குமுறைகள் ஈழ மக்களை ஆயுதம் ஏந்த நிர்பந்தித்து உள்ளன. ஈழத்து மக்கள் சிறீலங்கா சிங்கள இனவாத அரசை எதிர்த்து மட்டும் போராடிக்கொண்டிருக்கவில்லை. சிங்கள இனவாத அரசுக்கு சகல வழிகளிலும் உதவி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும், அதனால் தலைமை தாங்கப்படும் சர்வதேச பிற்போக்கு சக்திகளை எதிர்த்தும் தீரத்துடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்.

இந்துமாக்கடலில் பதட்ட தணிவுக்கு குந்தகம் ஏற்படுத்திவரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இப்போது இலங்கைத்தீவை தனது ஆயுதக் கிடங்காக மாற்றி வருகிறது.

இந்திய-சோவியத் உறவும், இந்துமாக்கடலில் இந்தியாவின் தீர்மானகரமான பாத்திரமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க நலன்களுக்கு, உகந்ததாக இல்லை. இதனால் இந்தியாவின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் தீவிர முயற்சி எடுத்துவருகிறது. இந்த நிலையில் அமெரிக்க ஏகாதி பத்தியத்தையும், அதனால் தலைமை தாங்கப்படும் பிற்போக்கு சக்திகளையும் எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடி வரும் ஈழமக்களுக்கு இந்தியா ஆதரவளிக்கவேண்டும். ஈழப்போராட்டம் இந்தியாவின் பாதுகாப்புக்கும் அவசியமானமானது. மேற்கண்டவாறு ஈழமணி தனது உரையில் குறிப்பிட்டார்.

### ஈழப்போராளிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது தவிக்கும் சிறீலங்கா அரசு

சீனா, இஸ்ரேல், தென்னாபிரிக்கா, அமெரிக்கா, பாகிஸ்தான், பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்தெல்லாம் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்து அவற்றைக்கொண்டு ஈழதேச விடுதலைப் போராட்டத்தை அடக்கிவிடலாமெனப் பகற்கனவு கண்ட கொலைவெறியன் ஜெயவர்த்தனா, ஈழமக்களின் வீரமிகு போராட்டத்திற்கு சிறீலங்கா இராணுவம் ஈடுகொடுக்க முடியாது என்பதை உணர்ந்துள்ளான். இதனால் சிறீலங்காவிற்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் பிரதமர் தட்சரிடம் பிரிட்டிஷ் துருப்புக்களை இலங்கையில் நிறுத்துமாறு கோரியுள்ளான். இவனது இக்கோரிக்கை பற்றி இந்திய அரசு வியப்பும் அதிர்ச்சியும் அடைந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒன்பது வயது சிறுமியை விழுங்கிய கொலைபாதகர்களின் கொடிய சட்டங்கள்

மார்ச் 29: ஈழதேசத்தை ஆக்கிரமித்திருக்கும் சிறீலங்கா அரசு அவசரகாலச் சட்டத்தின்கீழ் ஆட்சிபுரியும் அவலநிலையிலுள்ளது. ஈழதேசத்தில் அமலிலுள்ள ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக ஈழமக்களில் பலர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறமுடியாத நிலையில் இறக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த தருமலிங்கம் தங்கலா என்னும் ஒன்பது வயதுச் சிறுமி கடும் காய்ச்சலினால் நோய்வாய்ப்பட்டிருந்தாள். சிறுமிக்கு கடும் காய்ச்சலைத் தொடர்ந்து வாந்தி எடுத்துள்ளாள். ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்தபடியால் அச்சிறுமியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை, இதனால் அச்சிறுமி பரிதாபமாக மரணித்தார். இவ்வாறு மறைமுகமாகக் கொலை செய்யும் நேரடியாகச் சுட்டுப் படுகொலை செய்யும் வரும் கொலைவெறி அரசு ஈழதேசத்திலிருந்து அடித்து விரட்டப்படும்வரை ஈழமக்கள் ஓயப்போவதில்லை.

## போராட்ட முன்னெடுப்பைத் தாமதப்படுத்தும் பாசிஸ்ட் ஜே.ஆரின் தந்திரோபாயம்!

நவ பாசிஸ்ட் ஜே. ஆர். ஜெயவர்த்தனே ஆங்கில வார ஏடு ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் ஈழப் போராளிகளை சந்தித்துப் பேச விரும்புவதாக கூறியுள்ளான். தமிழ் தீவிரவாதிகளின் தலைவர்களை சந்தித்து பேச நான் விரும்புகிறேன். ஈழக் கோரிக்கையை அவர்கள் கைவிடவேண்டும் என்று நான் கோரவில்லை. அவர்கள் வன்முறையை நிறுத்தவேண்டும். இவ்வாறு அந்தப் பேட்டியில் ஜே. ஆர் தெரிவித்துள்ளான். ஈழவிடுதலை இயக்கங்களின் தலைவர்களை ஜே. ஆரின் பிரதிநிதி சந்தித்து பேச இருப்பதாகவும், சிறீலங்கா அரசின் பிரதிநிதிகள் இந்தியா செல்லப் போவதாகவும் சிறீலங்கா பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன. ஒரு புறம் ஆயுதங்களை வாங்கிக் குவித்தபடியும், அப்பாவி தமிழ் பேசும் மக்களை படுகொலை செய்தபடியும் மறுபுறம் ஈழப் போராளிகளுடன் பேச விரும்புவதாக கூறிக்கொண்டிருப்பதும் ஜே. ஆரின் குள்ளநரித் தந்திரங்களே என்று ஈழவிடுதலை இயக்கங்கள் கருதுகின்றன. ஈழப்போராட்ட முன்னெடுப்பை தாமதப்படுத்த ஜே. ஆர். கையாளும் தந்திரோபாய நடவடிக்கையையிட்டு ஈழவிடுதலை இயக்கங்கள் விழிப்பாகவே இருக்கின்றன.



துப்பாக்கி ஏந்திய இராணுவ ரௌடிகளால் கொன்று குவிக்கப்பட்ட ஈழத்து மக்கள்

## இளநீர் பறித்துக் கொடுத்த சிறுவனின் இரத்தம் குடித்த மனித மிருகங்கள்!

பருத்தித்துறையில் சிறீலங்கா ஆக்கிரமிப்புபடைகள் 15 வயது பையன் ஒருவனை பிடித்து இளநீர் பறித்து தருமாறு கேட்டனர். அந்தச் சிறுவனும் மரத்தில் ஏறி இளநீர் பறித்து கொடுத்தான். இளநீரை குடித்து தமது தாகம் தீர்த்த கொலைப்பட்டாளங்கள் அந்தச் சிறுவனை மரத்தில் இருந்து இறங்கும் போது தமது துப்பாக்கிப் பசிக்கு தீனியாக்கினர். துப்பாக்கிச் சத்தம் கேட்டு தமது வீட்டில் இருந்து வெளியே வந்த 40 வயது ஆசிரியர் ஒருவரையும் கூலிப்படைகள் பலியெடுத்தன.

www.tamilarangam.net



# எதிரிப் படைகள் சுற்றி வளைத்தன - மக்கள் விடுதலைப் படை வீரப்போர்

மார்ச் 29, மட்டக்களப்பில் கல்லாறு என்னும் இடத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினதும் அதன் ஆயுதப் படையான மக்கள் விடுதலைப் படையினதும் உறுப்பினர்கள் அரசியல் வகுப்பொன்றில் கலந்து கொண்டிருந்தனர். சிறீலங்கா அதிரடிப்படையினர் இவர்கள் கூடியிருந்த வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டு மக்கள் விடுதலைப் படையினரை சரணடையுமாறு அறிவித்தனர். எதிரிப்படைகளிடம் சரணடைய விரும்பாத மக்கள் விடுதலைப்படை வீரர்கள் தீரமுடன் போரிட்டனர். AK 47 ரக துப்பாக்கி இரண்டு S. M. G. ரக துப்பாக்கி இரண்டு கைத்துப்பாக்கி ஒன்று, வெடிகுண்டு ஒன்று இவை தான் மக்கள் விடுதலைப் படையினரிடம் இருந்த ஆயுதங்கள். ஆனால் எதிரிப்படைகள் நவீன, ஆயுதங்களுடன் போராளிகள் மீது தாக்குதல் நடத்தின. குண்டுகள் தீரும்மட்டும் சமர்புரிந்த புரட்சிகரப் போராளிகள் 38 அதிரடிப்படையினரை மாய்த்தனர். இறுதியில் குண்டுகள் தீர்ந்த நிலையில் இனிய ஈழத்தின் புரட்சிப் போராளிகள் ஆறுபேர் தாம் நேசித்த தாயகத்தின் மடியிலே உயிர்துறந்தனர்.



தோழர் கருணாநிதி



தோழர் அமிர்தநாயகம்



தோழர் ஜெயபால்



தோழர் செல்வநாயகம்

எதிரியுடன் பொருதி இரத்தசாட்சியானவர்கள்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினரும், மக்கள் விடுதலைப் படையின் மட்டு நகர் பிராந்திய தளபதியுமான தோழர் சிவலிங்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி உறுப்பினர் கருணாநிதி, மக்கள் விடுதலைப்படை வீரர்கள் அமிர்தநாயகம், ஜெயபால், ரஞ்சன், செல்வநாயகம் ஆகிய புரட்சிகரப் போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர். இதில் தோழர் சிவலிங்கம் கடந்த எட்டு வருடமாக போராட்டகளத்தில் செயல்பட்டு வந்ததுடன், மக்கள் விடுதலைப்படையின் பாசறைகளில் பொறுப்பாளராகவும் பணியாற்றியவர். மட்டு நகர் சிறையை மக்கள் விடுதலைப்படையினர் உடைத்து போராளிகளை மீட்டெடுத்த போது தோழர் சிவலிங்கமும் மீட்கப்பட்டார். சிறை உடைப்பில் சிவலிங்கத்தின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

## சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் கூறுகிறார்!
## சிறீலங்கா அரசே யுத்தத்தை நிறுத்து.

யாழ்ப்பாணத்தில் தற்போது நடைபெறுகின்ற சம்பவங்கள் மனிதாபிமானமுள்ள எந்தச் சக்தியாலும் கண்டிக்கப்பட வேண்டியது. இவ்வாறு சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்ட செயலாளர் பொன். குமாரசுவாமி கூறினார். சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அ. வைத்தியலிங்கம் அவர்களின் 70ம் பிறந்ததினவிழா கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் மேலும் பேசுகையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அரசு எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் பிரச்சனையை சிக்கலாக்கி வருகிறது. தமிழ் பேசும் மக்கள் மீதான அடக்குமுறையை சிறீலங்கா அரசு உடன் நிறுத்த வேண்டும் என்று கூறினார்.

★ ★ ★ ★ ★ ★

## கருவறுக்கும் கொலைக்கும்பல்கள்
## கர்ப்பிணித்தாயை பலாத்காரப்படுத்தின!

மே 13, நாயன்மார் காட்டுப்பகுதியில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகள் சோதனை என்ற பெயரில் தமது காலித்தனங்களை கட்டவிழ்த்துவிட்டன. வீடொன்றுக்குள் புகுந்த இராணுவக் காடையர் கூட்டம் இரு குழந்தைகளுக்குத் தாயான ஆறுமாத கர்ப்பிணிப் பெண்மீது வெறிகொண்டு பாய்ந்தது. கட்டிடத் தொழிலாளியின் இளம் மனைவியான அப்பெண்ணை நிர்வாணமாக்கி இரு குழந்தைகளின் எதிரில் பலாத்காரப்படுத்தி தமது காமப்பசியை கூலிப்படைகள் தீர்த்துக்கொண்டன.

www.tamilarangam.net





பெற்ற மகனை பாசிஸ்டு கழிசடைகள் பலிகொண்ட போது அநாதரவாகி கலங்கி நிற்கும் அன்னை ஒருத்தி............

பேச்சுவார்த்தைக்கான முன் நிபந்தனைகளை ஏற்கமுடியாது!

ஈழம் தவிர்ந்த எந்தவித அரசியல் தீர்வும் அங்கீகரிக்கப்படாது.

## இணைந்த விடுதலை அமைப்புக்களின் ஒருமித்த முடிவு

சிறீலங்கா தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஈழ விடுதலைப் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், யுத்த நிறுத்தம் செய்து கொள்வதற்கும் சில முன் நிபந்தனைகளை விதித்துள்ளார். இந்த நிபந்தனைகளை முற்றாக நிராகரிக்கிறோம் என்று EPRLF, TELO, EROS LTTE ஆகிய இணைந்த விடுதலை அமைப்புகள் ஒரே குரலில் கூறியுள்ளன. இது தொடர்பாக வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது அத்துலத் முதலி முன் வைத்த முன் நிபந்தனைகளுள் சிறீலங்கா ஒரே நாடு என்பதை ஏற்றுக் கொள்ளுதல் பௌத்தமதத்தை அரசமதமாக கொள்ளல், சிறீலங்க தேசியக் கொடியை ஏற்றுக் கொள்ளுதல் என்பனவும் அடங்கும். இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான நிபந்தனைகளை முன்வைத்திருப்பதுமூலம் சிறீலங்கா வின் ஆளும் வர்க்கத்திற்கு தமிழ் பேசும் மக்களின் அடிப்படை பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காண்பதில் உண்மையான அக்கறை கிடையாது என்பது தெளிவாகிவிட்டது. சிறீலங்கா அரசின் இனவெறித்தன்மையும், விசமத்தனமான ஆக்கிரமிப்பு போக்கும் தெட்டத் தெளிவாக தெரிகிறது.

சிங்கள-பௌத்த இனவெறியை அப்பட்டமாகப் பிரதிபலிக்கும் சிறீலங்கா அரசமைப்பையோ தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை அங்கீகரிக்க மறுத்து எமது மக்களின் சுதந்திரத்தையும், இறைமையையும் குழிதோண்டி புதைக்க முயலும் சிறீலங்கா அரசையோ நாம் **அங்கீகரிக்க முடியாது.**

பேச்சுவார்த்தைக்கான எவ்விதமான முன் நிபந்தனைகளையும் நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம். எமது மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் **சுதந்திரமான அரசொன்று** நிறுவுவதைத் தவிர்ந்த வேறு எந்த அரசியல் தீர்வையும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்பதை மிகத் தெளிவாகக் கூறவிரும்புகிறோம்.



**வன்னி மண்ணில் ஆக்கிரமிப்பு படைகளால் கைது செய்யப்பட்டு வதை முகாமில் கொல் லப்பட்ட மக்கள் விடுதலைப் படை வீரர் தோழர் நாகராஜா**

www.tamilarangam.net



## "இலங்கையில் நடக்கும் இனவெறிப் படுகொலைகளை இந்தியா சகிக்காது"

கடந்த பிப்ரவரி மாதம் சிறீலங்கா பாராளுமன்றத்தில் உரையாற்றிய நவபாசிஸ்ட் ஜே.ஆர். ஜெயவர்த்தனே இந்தியாவிலுள்ள சில சக்திகள் இலங்கையில் நடைபெற இருக்கும் கடைசிப் போர்க்களத்துக்கு ஆதரவளிப்பதாகவும், சிறீலங்கா அரசு போதிய நடவடிக்கை எடுக்காது இருந்தால் அதன் எல்லைகள் கொழும்பு நோக்கி குறுக்கப்பட்டிருக்கும் என்றும் கூறியிருந்தார். இந்தியாவிலுள்ள சிறீலங்கா தூதரை தமது அலுவலகத்துக்கு அழைத்த இந்திய வெளிவிவகார இலாகா செயலர் ஜே. ஆரின் அவதூறான குற்றச்சாட்டுக்கு கண்டனம் தெரிவித்தார். இந்தத் தகவலை இந்திய வெளிவிவகார துணை அமைச்சர் குர்ஷித் ஆலம்கான் லோக்சபையில் தெரிவித்தார். இத்தகைய குற்றச்சாட்டுகளை சிறீலங்கா அரசு அடிக்கடி சுமத்துவதாகவும், இந்தியா தொடர்ந்து இதற்கு கடுமையான கண்டனம் தெரிவித்து வருவதாகவும் குர்ஷித் ஆலம்கான் கூறினார். இலங்கையில் நடைபெறுகின்ற இனவெறிப் படுகொலைகளை இந்தியா சகித்துக் கொண்டிருக்காது என்றும், இந்தியா வந்துள்ள அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கும்படி சிறீலங்கா அரசுக்கு தாம் வற்புறுத்துவதாகவும் குர்ஷித் ஆலம்கான் கூறியுள்ளார்.

## பற்றி எரிகிறது இனவெறித்தீ...

### இனவெறி மிருகங்களின் கொலைவெறி வேட்டைகள்....

மே 15, அநுராதபுரத்தில் ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்றினால் சிங்களமக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை காரணமாக காட்டி சிறீலங்கா இராணுவக்கூலிகளின் தலைமையில் சிங்களக் காடையர்களும் தமிழர்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். அநுராதபுரம புகையிரத நிலையத்தில் நின்ற தமிழர்கள மீது நடைபெற்ற தாக்குதலில் பலியானவரின உடல்கள் அநுராதபுரம் சவக்காலையில் அடையாளம் காணமுடியாத நிலையில் வைக்கப்பட்டிருந்தது. அநுராதபுரம் புகையிரத நிலைய அதிபர் தங்கராசா, இன்ஜீன் சாரதி, கணக்குபதிவு தலைவர் ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அநுராதபுரம் பகுதியில் உள்ள தமிழர்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டன. இதனால் அச்சமடைந்த தமிழர்கள் வவுனியா நோக்கி ஓடிவந்து கொண்டிருக்கின்றனர். இது தவிர வவுனியா உதவி அரசாங்க அதிபர் குணநாயகமும், வவுனியா செயலக சமூக சேவைப்பகுதி பிரதம லிகிதர் பாலசுப்பிரமணியமும் சென்று கொண்டிருந்த ஜீப் வண்டி மிகிந்தலை என்னும் சிங்களப்பகுதியில் வழிமறிக்கப்பட்டு அவர்கள் இருவரும் படுகொலை செய்யப்பட்டனர். இவர்கள் உடல்களையும் சிங்கள காடையர்கள் தீயிட்டு பொசுக்கி விட்டனர்.

அம்பாறையில் மே 20 ம் திகதி பிரிட்டிஷ் கூலிப் படைகளிடம் பயிற்சி பெற்ற சிறீலங்கா கமாண்டோ படையின் தலைமையில் வந்த சிங்கள காடையர் கூட்டம் 16 தமிழர்களை படுகொலை செய்தது. பலர் படுகாயமடைந்தனர். சிறீலங்கா அரசு இனப்படுகொலை செய்திகளை மூடி மறைத்து வருகிறது ஆனால் சிறீலங்கா அரசின் கூலிப்படைகளின் தலைமையில் ஈழமக்கள் மீது சிறீலங்கா மண்ணில் வன்முறை ஏவப்பட்டு வருகிறது.

## தீயசக்திகளின் தாக்குதல்...

மே : 15 அநுராதபுரம், நொச்சியக மருதங்கடுவ ஆகிய சிறீலங்கா பகுதிகளில் ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று கொலைவெறி வேட்டை நடத்தியது. பஸ் வண்டியொன்றில் இராணுவ சீருடையுடன் காணப்பட்ட இக்கும்பல் சாதாரண சிங்கள மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது, பஸ் நிலையத்தில் நின்ற மக்களை சுட்டுக் கொலை செய்தும், படுகாயப்படுத்தி விட்டு பௌத்த விகாரம அருகே நின்ற மக்களையும் ஈவிரக்கமின்றி இக்கும்பல் வேட்டையாடியதாம், இந்த சம்பவத்தில் 70 பேர் கொல்லப்பட்டதுடன், 100 பேர் காயமடைந்துள்ளதாக தெரிகிறது.

## எதிரிமுகாம் தாக்குதல்...

ஏப் 11. யாழ்ப்பாணத்திலுள்ள சிறீலங்கா காவல் நிலையம் மீது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதல் நடத்தினார்கள். எந்திரத்துப்பாக்கிகள், ராக்கட் குண்டுகளை பயன்படுத்தி இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலின் போது 50க்கு மேற்பட்ட சிறீலங்கா கூலிப்படையினர் கொல்லப்பட்டதாகவும், பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு கூறுகிறது. இந்த வெற்றிகரமான தாக்குதலில் போராளிகள் தரப்பில் எவ்வித சேதமுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net



**கொலைவெறி கொண்டலையும்**

**கோரத்தனம் தொடர்கிறது...**

**இலக்குகள் மாறுகின்றன.**

**போராளிகள் மாயமாய் மறைகின்றனர்.**

ஈழவிடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் சில இயக்கங்கள ஈழ வாலிபர்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்து பின்னர் படுகொலை செய்தல், தமது இயக்கத்தினுள் முரணான கருத்துக்களைக் கொண்டவர்களை மோசமான சித்திரவதையின் பின்னர் படுகொலை செய்தல், (பின்னர் கற்பூரம், சாம்பிராணி போன்றவற்றைப் பற்ற வைத்து துர்நாற்றத்தைக் குறைத்தல்) சக இயக்கப் போராளிகளைக் கடத்திச்சென்று சித்திரவதை செய்தல் போன்ற அநாகரீக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன,

அண்மையில் தமிழ் இளைஞர்கள் சிலர் 'சதி' (?) வேலைகளில் ஈடுபட்டுவரும் ஒரு கும்பலினால் கடத்திச் செல்லப்பட்டு மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். இச்சதிகாரக் கும்பலின் கேடுகெட்ட செயலினால் சீற்றம் கொண்ட மக்கள் திருநெல்வேலியிலுள்ள அம்மன் கோவில் முன்றலில் 26. 3. 85 அன்று காலை உண்ணாவிரதமிருந்தனர். காலை 7 மணிக்கு ஆரம்பமான இவ்வுண்ணாவிரதத்தில் பெருந்தொகையான பெண்கள் கலந்து கொண்டனர். உண்ணாவிரதிகள் மத்தியில் பல சுலோக அட்டைகள் காணப்பட்டன. அவற்றில், ''எங்கள் பிள்ளைகளை எம்மிடம் ஒப்படையுங்கள்'' 'போராளிகள் வேடத்தில திரியும கொலைகாரக் கும்பல்களை இனங்காணுங்கள்'' போன்ற வாசகங்கள் காணப்பட்டன. இயக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஈழவிடுதலையை கூடிய கெதியில் வென்றெடுக்க வேண்டும் என்ற அவாவிற்கிணங்க விடுதலை இயக்கங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டுவரும் இவ்வேளையில் கடத்தலிலும் கொலை செய்வதிலும் ஈடுபட்டுவரும் கடைகெட்ட கும்பல்கள் மக்களிடமிருந்து அந்நியமாக்கப்படல் வேண்டும்.

**ஈழமக்களை திருப்பி அனுப்பாதே!**

**ஐ. நா. சபை தலையீடு!**

இலண்டனில் அடைக்கலம் தேடும் ஈழமக்கள் 24 மணி நேரத்தில் இங்கிலாந்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அனுமதி பெற வேண்டும், இல்லையெனில் அவர்கள் உடன் வெளியேற வேண்டும் என்று பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் அறிவித்திருந்தார். இதற்கு பிரிட்டிஷ் எதிர்க்கட்சிகள் பலத்த கண்டனம் தெரிவித்தன. உயிருக்கு பாதுகாப்பற்ற நிலையில் அடைக்கலம் தேடி வந்த தமிழர்களை திருப்பி அனுப்புவது மனிதாபிமானமற்ற செயல் என்று அவர்கள் கூறினார்கள். இதையடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் கமிஷன் இதில் தலையிட்டது. ஈழமக்களை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று பிரிட்டிஷ், மற்றும் தமிழர்கள் தஞ்சம் புகுந்துள்ள ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தக் கமஷன் வேண்டுகோள் விடுத்துள்ளது. தமிழர்களை திருப்பி அனுப்பினால் இலங்கையில் அவர்கள் மரணதண்டனை அல்லது கடும் தண்டனைக்கு உள்ளாகலாம் என இக்கமிஷன் சுட்டிக்காட்டியுள்ளது.

**இலங்கைத்தீவுக்கு இந்திய இராணுவத்தை அனுப்புங்கள்!**

**நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்!**

ஈழமக்கள் சிறீலங்கா அரசால் படுகொலை செய்யப்படுவதை தடுத்து நிறுத்த இந்திய இராணுவம் அனுப்பப்படவேண்டும் என்று கோரும் ரிட் மனு தமிழ்நாட்டில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி ஒருவரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளளார். இந்தியாவிற்கு பெரும் செலவு ஏற்பட்டு உள்ளது. இம்தாடு இந்தியாவின் பாதுகாப்புக்கு ஊறு நேரும் வகையில் திருக்கோணமலையில் அமெரிக்க இராணுவதளம் அமைக்கப்படுகிறது. எனவே இந்தியா இராணுவத்தை அனுப்பி இலங்கைப் பிரச்சினையில் தலையிட வேண்டும் என்று ரிட் மனுமீது வாதிட்ட சட்டத்தரணி கூறினார். இந்த மனு மீதான தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**இரயில் வண்டியில் இரத்த வெள்ளம்**

**ஈழமக்கள் 100 பேர் படுகொலை**

மே 15 : கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த இரயில் வண்டி சிறீலங்கா இராணுவக் கூலிகளால் அநுராதபுரத்தில் வைத்து தடுக்கப்பட்டது, சோதனை நடத்தப் போவதாக கூறி உள்ளே புகுந்த இக்கூலிகள், இந்த வண்டியில் பயணம் செய்த தமிழர்கள் அனைவரையும் கீழே இறங்குமாறு கூறினர். பின்பு வரிசையாக அவர்களை நிறுத்தி வைத்து குரூரமாகத் தாக்கத் தொடங்கினர். இதனால் பீதியடைந்த பயணிகள் ஓடத் தொடங்கியதும இராணுவக் கூலிகள் கண்மூடித்தனமாக தமிழர்களை சுட்டு வீழ்த்தினர். இதில் நூற்றுக்கு மேற்பட்டோர் படுகொலையாகினர். பலர் படுகாயமடைந்தனர்.

www.tamilarangam.net



## இந்திய-சோவியத் கூட்டறிக்கை தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதி நிலவட்டும்

### சுதந்திரம், சுயாதிபத்தியம், கூட்டுச்சேராமை நிலைக்கட்டும்

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும், சோவியத் அதிபர் தோழர் கோப்பச்சோவும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதி நிலவ வேண்டும் என்றும், இந்தப் பிராந்தியத்தில், உள்ள நாடுகளின் சுதந்திரம், சுயாதிபத்தியம், தேச ஒருமைப்பாடு, கூட்டுச் சேராமை ஆகியன பேணப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. தெற்காசியப் பிராந்திய நாடுகளின் விவகாரத்தில் வேறு நாடுகள் தலையிடுவதை தாம் எதிர்ப்பதாகவும், இந்தப் பிராந்தியத்தில் ஆயுத மோதல்களை முடிவுக்கு கொண்டுவந்து சமாதானம் நிலவ பாடுபட வேண்டும் என்றும் அறிக்கை கூறுகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனால் தலைமை தாங்கப்படும் பிற்போக்குவாத இராணுவ மேலாதிக்க கூட்டாளிகளும் சிறீலங்காவில் தமது ஆயுதங்களை குவித்து வருகின்றன. ஏற்கனவே அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியைப் பலப்படுத்த சகல உதவிகளும் வழங்கி பாகிஸ்தானை தமது ஆக்கிரமிப்பு யுத்த விளை நிலமாக்கியது போலவே இப்போதும் இந்த நாடுகள் சிறீலங்கா நவபாசிச அரசுக்கு முட்டுக் கொடுத்து சிறீலங்காவையும் தமது தாவு தளமாக்கி வருகின்றன. இதனால் தெற்காசியப் பகுதியில் மேலும் பதட்ட நிலை ஏற்பட்டு வருகிறது. இந்திய துணைக்கண்டத்தின் பாதுகாப்புக்கும், ஒருமைப் பாட்டுக்கும் அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. இன்றுள்ள நிலையில் சிறீலங்காவின் போக்கு, நவகாலனித்துவ நச்சுச் சுழலில் அது சிக்கிக்கொண்டிருப்பது தெற்காசிய பிராந்திய அமைதிக்கு பெரும் கேடு விளைவிக்கிறது.



ஆதிக்க வல்லூறுகளின் இரத்த வெறிக்கு அஞ்சி இந்திய மண்ணின் அகதி முகாம்களில் ஏக்கங்களை சுமந்தபடி வாழும் ஈழத்துச் சிறுவன்

### விடுதலைப் போராளி வீரமரணம் எதிரிப்படைகள் கொல்லப்பட்டனர்

மே 2: திருக்கோணமலையில் உள்ள நிலாவெளி என்னும் இடத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சென்றுகொண்டிருந்தபோது சிறீலங்கா இராணுவக் கூலிகளும், கடற்படைக் குண்டர்களும் திடீரென முற்றுகையிட்டனர். கூலிப்படைகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் போராளி குலம் பலியானார். ஜீவன் என்கின்ற மற்றொரு போராளி எதிரிப்படையினரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றுவிட்டார். இதைத் தொடர்ந்து தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எதிரிப்படைகளுடன் போரிட்டனர். இச்சமரில் சிறீலங்கா விமானப்படை சாரதி உட்பட ஆறு எதிரிப்படையினர் கொல்லப்பட்டனர் என்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

### எதிரிப்படைகளுடன் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் மோதல்: ஒன்பது போராளி வீரமரணம்: 48 கூலிப்படைகள் சாவு

மே 9, கொக்காவில் இராணுவ முகாம் நோக்கி இரண்டு புல்டோசர்களில் சென்றுகொண்டிருந்த தமிழ் ஈழ விடுதலை இயக்க உறுப்பினர்களுக்கும் சிறீலங்கா இராணுவக் கூலிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கி சண்டையில் 48 கூலிப்படைகள் கொல்லப்பட்டதாகவும், தமது முக்கிய உறுப்பினர் மிச்சா உட்பட ஒன்பது போராளிகள் வீரமரணம் அடைந்ததாகவும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது. எதிரிப்படையினர் ராக்கட் குண்டுகளையும், நவீன ஆயுதங்களையும் பயன்படுத்தி போராளிகள் மீது தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலுக்கு ஈடுகொடுத்து தமிழ் ஈழ விடுதலை இயக்க உறுப்பினர் இருபத்தைந்து நிமிட நேரம் போரிட்டனர். கொக்காவில் கூலிப்படை முகாம் கட்டிடம் ஒன்றையும் புல்டோசர் மூலம் போராளிகள் சேதப்படுத்தினர்.

www.tamilarangam.net

*ஞனிச் சுற்றுக்கு மட்டும்*

## தேசியம் என்பது பகைமைகளின் விளை நிலமல்ல

அநுராதபுரத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று சிங்கள மக்கள் மீது நடத்திய கோரத்தன வெறியாட்டம் பலரைப் பலி கொண்டுவிட்டது. இந்த கொலைகளுக்கான காரணத்தை மக்களை நேசிக்கும் புரட்சிகரப் போராளிகள் மீது சிறீலங்கா அரசு சுமத்தியிருக்கிறது. மண்ணின் மீதும், மக்கள் மீதும் கொண்ட நேசத்தால் ஆயுத பாணிகளாகியுள்ள புரட்சிகரப் போராளிகள் எவரும் இந்த ஈனத்தனமான செயலில் இறங்கியிருக்க முடியாது.

தேசிய உணர்வையும், நாட்டுப்பற்றையும், தாயகத்தின் கௌரவத்தையும் உயர்வாக மதிக்கும் போது, ஒரு மக்களினத்திற்கு எதிராக இந்த தேசிய உணர்வு திசை திரும்பி விடுவதை யாரும் அங்கீகரிக்க முடியாது. தேசியம் என்பது மற்ற தேசங்களையும், தேசிய இனங்களையும் வெறுக்கின்ற, பகைமை பாராட்டுகின்ற விளை நிலமாக மாறுவதை தேசிய ஒடுக்குமுறையாளர்கள் மட்டுமே விரும்ப முடியும். ஏனெனில் இவை அவர்களின் படு பிற்போக்கான நலன்களுக்கே சேவை செய்கின்றன.

சிங்கள உழைக்கும் மக்களின் போராட்டத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் ஈழத்தின் புரட்சிகரப் போராளிகள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதில்லை.

ஈழப் போராட்டத்தை முன்னெடுக்க ஐக்கியப்பட்டுச் செயல்படும் TELO, EROS, LTTE, EPRLF ஆகிய அமைப்புகள் சிங்கள மக்கள் மீது நடைபெற்ற காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை வன்மையாக எதிர்த்துள்ளன. இன்றுள்ள நிலையில் இந்த நான்கு அமைப்புகளும் இதனை எதிர்த்துள்ளன என்று கூறும்போது ஈழமக்களில் பெரும்பான்மையோரின் கருத்தாகவே இது பிரதிபலிக்கிறது.

# வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்!

PRINTED MATTER

**EPIC**

HEAD OFFICE :

POST BAG. 5551
MADRAS - 600 094, S. INDIA

LONDON BRANCH :

B. M. BOX 1738
LONDON WCI N 3XX, U. K.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்